செ.வெ.எண் : 55 /ஜுலை நாள் : 31.07.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் விதவையர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் விதவையர்களின் குழந்தைகளுக்கு ஒன்றாம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை மற்றும் கல்லூரி படிப்புகளுக்கு ரக்ஷா மந்திரி முன்னாள் படைவீரர் நலநிதி கல்வி உதவித்தொகை திட்டம் வாயிலாகவும் (RMEWF) தொழிற்சார்ந்த பட்டப் படிப்புகளுக்கு பாரதப் பிரதமர் கல்வி உதவித்தொகை திட்டம் வாயிலாகவும் (PMSS) மற்றும் JCO தரத்திலுள்ள முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளுக்கு & பாரதப் பிரதமர் கல்வி உதவித்தொகை வாயிலாக விண்ணப்பிக்க இயலாத முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளுக்கு தொகுப்புநிதி கல்வி உதவித்தொகை திட்டம் (AF) வாயிலாகவும் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் விதவையர்கள் ரக்ஷா மந்திரி முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து கல்வி உதவித்தொகை பெற படைவிலகல் சான்று, முன்னாள் படைவீரர் அடையாள அட்டை, முன்னாள் படைவீரரின் புகைப்படம், முன்னாள் படைவீரரின் ஆதார் அட்டை, முன்னாள் படைவீரரின் வங்கி கணக்கு புத்தகம், மொபைல் எண், மின்னஞ்சல் முகவரி, ஓய்வூதிய ஆணை, குழந்தைகளின் முந்தைய ஆண்டு மதிப்பெண் சான்றிதழ், படைவிலகல் சான்றிலுள்ள குடும்ப விவரம் / பகுதி -II ஆணையில் பதிவு செய்யப்பட்ட விவரம், மாநில அரசிடமிருந்தோ அல்லது தற்போது வேலை பார்க்கும் அலுவலகத்திலிருந்தோ குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை ஏதும் பெறவில்லை என்பதற்கான உறுதிமொழி ஆகிய ஆவணங்களுடன் www.ksb.gov.in என்ற இணையதளத்தில் 1 முதல் 9-ஆம் வகுப்பு வரை மற்றும் 11-ஆம் வகுப்பு பயின்று வரும் குழந்தைகளுக்கு 30.09.2017 வரையிலும், 10 மற்றும் 12-ஆம் வகுப்பு பயின்று வரும் குழந்தைகளுக்கு 30.10.2017 வரையிலும் கல்லூரி படிப்புகளுக்கு 30.11.2017 வரையிலும் 2 குழந்தைகளுக்கு மட்டும் கல்வி உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கலாம்.

தொழிற்கல்வி சார்ந்த பட்டப் படிப்புகளுக்கு பாரதப் பிரதமர் கல்வி உதவித்தொகை திட்டத்திலிருந்து கல்வி உதவித்தொகை பெற படைவிலகல் சான்று, முன்னாள் படைவீரர் அடையாள அட்டை, முன்னாள் படைவீரர் மற்றும் குழந்தைகளின் புகைப்படம், முன்னாள் படைவீரர் மற்றும் குழந்தைகளின் ஆதார் அட்டை, முன்னாள் படைவீரர் மற்றும் குழந்தைகளின் வங்கி கணக்கு புத்தகம், மொபைல் எண், மின்னஞ்சல் முகவரி, ஓய்வூதிய ஆணை, குழந்தைகளின் 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு / UG / Diploma மதிப்பெண் சான்றிதழ் (நேர்விற்கேற்ப), முன்னாள் படைவீரர் சான்றிதழ், போனாபைட் சான்றிதழ், குழந்தைகளின் வங்கி கணக்குடன் ஆதார் எண் இணைக்கப்பட்டதற்கான சான்றிதழ் ஆகிய ஆவணங்களுடன் www.ksb.gov.in என்ற இணையதளத்தில் 15.11.2017 வரையில் 2 குழந்தைகளுக்கு மட்டும் கல்வி உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கலாம்.

முன்னாள் படைவீரர்கள் மற்றம் அவர்தம் விதவையர்கள் தொகுப்பு நிதியிலிருந்து கல்வி உதவித்தொகை பெற படைவிலகல் சான்று, முன்னாள் படைவீரர் அடையாள அட்டை, முன்னாள் படைவீரர் மற்றும் குழந்தைகளின் பெயரில் துவங்கப்பட்ட வங்கி கணக்கு பத்தகம், குழந்தைகளின் முந்தைய ஆண்டு மதிப்பெண் சான்றிதழ், கல்வி மற்றும் விடுதி கட்டண இரசீது அசல், பள்ளி மாற்று சான்றிதழ், சாதி சான்றிதழ் ஆகிய ஆவணங்களுடன் முன்னாள் படைவீரர் நல துணை இயக்குநர் அலுவலகத்தில் கல்வி உதவித்தொகை படிவம் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பித்து கல்வி உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கலாம்.

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் விதவையர்கள் பாரதப் பிரதமர் கல்வி உதவித்தொகை திட்டம் / ரக்ஷா மந்திரி முன்னாள் படைவீரர் நலநிதி கல்வி உதவித்தொகை திட்டம் மற்றும் தொகுப்புநிதி கல்வி உதவித்தொகை திட்டம் ஆகிய திட்டங்களில் தங்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை கோரி விண்ணப்பம் சமர்ப்பித்து கல்வி உதவித்தொகை பெற்று பயன்பெறலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**